भारतीय गैर न्यायिक

एक सौ रुपये Rs. 100

रु. 100 ONE HUNDRED RUPEES

सत्यमेव जयते

भारत INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU Rs.100/- BY 480974

18.09.2020 New Green Lab & Biopsy Centre Ramanathapuram

ஆர். கோவிந்தராஜன் முத்திரைத்தாள் விற்பனையாளர் உரிமம் எண். ந.க./7822/அ.1/2001 வெளிப்பட்டிணம், இராமநாதபுரம், தமிழ்நாடு.

# கூட்டு வியாபார ஒப்பந்தப் பத்திரம்

2020ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ம் நாள் (தமிழ் சார்வரி வருடம் ஆவணித் திங்கள் 17ம் நாள்) இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் தாலுகா, 1/126, எம்.எஸ்.கே. நகர், ஆர் எஸ்.மடை, வெளிபட்டிணம் அஞ்சல், இராமநாதபுரம் என்ற முகவரியில் வசிக்கும் திரு.முனியசாமி அவர்கள் குமாரர் 44 வயதுள்ள M. பாலசுப்பிரமணியன்– 1வது பங்குதாரராகவும்

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை தாலுகா தினைக்குளம் அஞ்சல் மொத்திவலசை கிராமத்தில் கதவிலக்கம்.1/169, இல்லத்தில் வசிக்கும் L. நாராயணன் அவர்கள் குமாரர் 35 வயதுள்ள N. முருகபிரசாத்-2வது பங்குதாரராகவும் மேற்படி 2 பேரும் சேர்ந்து கூட்டாக நடத்துவதாக முடிவு செய்து எழுதிக்கொள்ளும் கூட்டுவியாபார ஒப்பந்தப் பத்திரம். அதன் சரத்துக்கள் கீழ்வருமாறு.

1வது பங்குதாரர் :

2வது பங்குதாரர் : N. Muruga Prasath

भारतीय गैर न्यायिक

एक सौ रुपये Rs. 100

रु. 100 ONE HUNDRED RUPEES

सत्यमेव जयते

भारत INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU

Rs. 100

BY 480975

18.09.2020 New Green Lab & Biopsy Centre Ramanathapuram



1. இக்கூட்டுத் தொழிலுக்கு ''NEW GREEN LAB & BIOPSY CENTRE'' என்று பெயர் வைத்து இதன் பதிவு அலுவலகம் பாரதிநகர் 7வது தெரு டோர் நிர்.1/786 இராமநாதபுரம் 623503 என்ற முகவரியில் 02.09.2020ம் தேதி முதல் இயங்கிவர வேண்டியதென்றும்,

2. இக்கூட்டு நிறுவனத்தின் முக்கிய தொழிலானது கிளினிக்கல் லேப் எடுத்து நடத்துவது என்றும்,

3. நம்மால் நடத்தப்படும் இக்கூட்டு நிறுவனத்திற்கு மூலதனமாக பங்குதாரர்கள் 2 பேர்களுக்கும் முதலீட்டுத் தொகையாக தலா ரூபாய்.8,00,000/- வீதம் மொத்தம் ரூபாய்.16,00,000/-(ரூபாய் பதினாறு இலட்சம்) முதலீடாக இருந்து வர வேண்டியதென்றும்,

4. இந்த கூட்டு வியாபார தொழிலில் கிடைக்கும் லாப-நட்டங்களை பங்குதாரர்கள் நாம் 2 (இரண்டு) பேரும் சரிசமமாகப் பிரித்துக் கொள்வது என்றும்,

1வது பங்குதாரர் :

2வது பங்குதாரர் : N. Murugesh Prasath.

भारतीय गैर न्यायिक

एक सौ रुपये Rs. 100

रु. 100 ONE HUNDRED RUPEES

सत्यमेव जयते

भारत INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU Rs. 100 BY 480976

18.09.2020 New Green Lab & Biopsy Centre Ramanathapuram.

ஆர். கோவிந்தராஜன் முத்திரைத்தாள் விற்பனையாளர் உரிமம் எண். ந.க./7822/அ.1/2001 கேணிக்கரை, இராமநாதபுரம். தமிழ்நாடு.



5. நம்மால் நடத்தப்படும் இக்கூட்டு நிறுவனத்தின் வங்கி வரவு செலவு கணக்குகளை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் ஏதேனும் ஒன்றில் இக்கூட்டு நிறுவனத்தின் பெயரில் கணக்கு துவங்கி அதை 1வது மற்றும் 2வது பங்குதாரர்கள் பெயரில் கூட்டாக இயங்கி வரவேண்டியதென்றும்,

6. நம்மால் நடத்தப்படும் இக்கூட்டு நிறுவனத்தை தற்போது நடைமுறையில் உள்ளவையோ அல்லது இனி அமலுக்கு கொண்டு வருவதையோ ஆகிய சர்க்காரின் எல்லா சட்ட திட்டங்களுக்கும் நாம் 2 பேரும் அதன் வரம்புக்குள் உட்பட்டு நடத்தி வர வேண்டியதென்றும்,

7. இக்கூட்டுத் தொழிலின் பங்குதாரர்களாகிய நமக்கு இதில் கூறப்பட்டுள்ள தொழில் மற்றும் அவரவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப ஏனைய தொழில்-களையும், வியாபாரங்களையும் செய்வதற்கு முழு உரிமை உண்டு என்றும்,

1வது பங்குதாரர் :

2வது பங்குதாரர் : N. Murugesa Prasath.

8. இக்கூட்டு நிறுவனத்தின் வங்கி வரவு செலவு கணக்குகள், வரி, வணிக வரி, நமூனாக்களில் கையொப்பமிடுதல், அரசாங்கம் உரிமம் எடுத்தல், புதுப்பித்தல், சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள் போன்றவற்றை பங்குதாரர்கள் 2 பேர்களும் மேற்கொள்வதென்றும்,

9. இக்கூட்டு நிறுவனத்தின் பொது நிர்வாகம், விளம்பரம், தபால்கள், நிலுவைகளை வசூல் செய்தல் போன்ற நடவடிக்கைகள் அனைத்தும் நாம் 2 பங்குதாரர்களும் சேர்ந்து மேற்கொள்வதென்றும்,

10. மேற்படி நிறுவனத்தின் வரவு-செலவு கணக்குகளை மாதந்தோறும் 05ம் தேதி சரிபார்த்து லாப-நட்டங்களை நாம் 2 பங்குதாரர்களும் சரிசமமாகப் பிரித்துக் கொள்வதென்றும்,

11. சாதாரணமாக இதுபோன்று தொழில் சம்பந்தமாக கணக்குப் புத்தகங்களும், குறிப்பு புத்தகங்களும் வைத்து எழுதப்படும் என்றும், இவைகளை நியாயமான எந்த நேரத்திலும் பங்குதாரர்கள் தடை ஏதுமின்றி எடுத்துப் பார்க்கவும், அவரவர்கள் உசிதம் போல அப்புத்தகங்களிலிந்து தேவையான விபரங்களை எழுதிக் கொள்ளவும் உரிமை உண்டு என்றும்,

12. ஒவ்வொரு பங்குதாரரும் நிறுவனத்திற்கு நன்மை பயக்கும் வகையில் நடந்து கொள்வதுடன், ஒருவருக்கொருவர் நீதியுடனும், நேர்மையுடனும் நடந்து கொண்டு சரியான முறையில் கணக்கு வைத்து வியாபாரம் சம்மந்தமாக எல்லா விஷயங்களையும் நாம் ஒருவருக்கொருவர் நமது சட்ட ரீதியான பிரதிநிதிக்காவது தெரிவித்தல் வேண்டும்.

13. இக்கூட்டுத் தொழிலை பங்குதாரர்களாகிய நாம் 2 பேரும் விருப்பம் உள்ளவரை தொடர்ந்து நடத்தி வரவேண்டியது என்றும், அதில் ஒரு பங்குதாரர் விலகவோ அல்லது இதற்கு முரண்பாடாக நடக்கும் ஒரு பங்குதாரரை நீக்கவோ எழுத்து மூலமாக 6 மாத நோட்டீஸ் கொடுத்து நீக்கப்படலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

1வது பங்குதாரர் :

2வது பங்குதாரர் : N. Muruga Prasath

14. மேற்கூறிய ஷரத்துக்களை நாம் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டும் என்று விருப்பப்பட்டாலும் அல்லது புதிய ஷரத்துக்களைச் சேர்க்க வேண்டும். என்று விருப்பப்பட்டாலும் மாற்று சாசனப்பத்திரம் மூலம் மாற்றிக் கொண்டு மற்ற ஷரத்துக்களின்படி நடந்து வர வேண்டியதென்றும்,

15. மேற்படி கூட்டுத்தொழிலை இந்திய கூட்டு வியாபாரச் சட்டம் 1932-ன்படி மேற்கூறிய ஷரத்துக்களுக்கு கட்டுப்பட்டும், சம்மதித்தும் ஏகமனதாக கையொப்பமிடுகின்றோம்.

16. மேலும் இந்த கூட்டு வியாபாரத்திற்கு போதிய மூலதனம் இல்லாத பட்சத்தில் நாம் கூட்டாளிகள் விரும்பும் வங்கிகளில், காலக்கடன், தவணைக் கடன் போன்றவற்றை கூட்டாகப் பெறலாம்.

17. இந்த கூட்டு வியாபாரத்தில் தங்களுக்குள் உள்ள உரிமையையோ அல்லது முதலீட்டையோ கூட்டாளியின் ஏகோபித்த சம்மதமின்றி யாதொரு கூட்டாளியும் வேறு யாருக்கும் மாற்றம் செய்யக் கூடாது.

18. இந்த கூட்டு வியாபரத்தின் பெயரில் தங்களின் விருப்பப்படி கிளைகள் ஏதேனும் அரம்பிக்க வேண்டும் என்று விருப்பட்டால் 2 நபர்களின் சம்மதத்தோடு ஆரம்பிக்களாம் என்று கூறப்படுகிறது.

19. கூட்டு வியாபாரம் சம்பந்தமாக பங்குதாரர்கள் இன்று முதல் செய்து கொள்ளும் ஒவ்வொரு முடிவும் தீர்மான ரூபத்தில் மினிட் புத்தகத்தில் எழுதி கையெழுத்துச் செய்து அதன்படி நடந்து வரவேண்டியது.

1வது பங்குதாரர் :

2வது பங்குதாரர் : N. Murugs Prasath

20. பங்குதாரர்கள் ஏதாவது அபிப்ராய பேதம் ஏற்பட்டால் அதற்கு இந்தியன் ஆர்ட்பிட்ரேசன் ஆக்டில் கண்டபடி பரிகாரம் தேடிக் கொள்ளலாம். என்று இப்பத்தரத்தின் மூலம் உறுதியளிக்கப்படுகிறது.

1வது பங்குதாரர்

2வது பங்குதாரர் N. Muruga Prasath

**சாட்சிகள்**

* V. Ganesan
* K. Muthukumar

## FORM C

[See rule 9(a)]

*Acknowledgement of Registration of Firms*

The Registrar of Firms, TamilNadu, hereby acknowledges the receipt of the statement prescribed by Section 58(1) of the Indian Partnership Act, 1932. The statement has been filed and the name of the firm **NEW GREEN LAB & BIOPSY CENTRE** has been entered in the Register of Firms as No **FR/Ramanathapuram/38/2020**.

Date :23-Sep-2020

Station : Ramanathapuram

Digitally Signed by Thiru/ Tmt/ Selvi

RATHINAVEL K

Registrar of Firms

Signature Not Verified

Digitally signed by KARUPPIAH RATHINAVEL

Date: 2020.09.23 11:02:19 IST